செய்தி வெளியீடு எண்:672 நாள்:01.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் உதவி ஆய்வாளர்களுக்கான ஓர் ஆண்டு பயிற்சி - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (1.9.2021) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வண்டலூர், ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் உதவி ஆய்வாளர்களுக்கான ஓர் ஆண்டு பயிற்சியினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு கடந்த 26.7.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார். பணிநியமன ஆணை பெற்ற 941 காவல் உதவி ஆய்வாளர்களில், தாலுகா காவல் நிலையங்களுக்கு 645 நபர்களும், ஆயுதப்படைக்கு 265 நபர்களும், தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு 31 நபர்களும் தேர்வு செய்யப்பட்டு பணிநியமன ஆணைகளை பெற்றுள்ளனர். இவர்களில் 280 பெண் காவல் உதவி ஆய்வாளர்களும் அடங்குவர்.

காவல் உதவி ஆய்வாளர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள 941 நபர்களுக்கு தமிழ்நாடு உயர் பயிற்சியகத்தில் ஓர் ஆண்டு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. 52 வாரங்கள் கொண்ட ஓர் ஆண்டு பயிற்சியில் இவர்களுக்கு சட்டம், புலன் விசாரணை நடைமுறைகள், தடய அறிவியல், மருத்துவம் சார்ந்த அறிவியல், குற்றவியல் தத்துவங்கள், மனோதத்துவ நடைமுறைகள், மனிதவள மேலாண்மை, காவல்துறை நெறிமுறைகள், காவல் நிலை ஆணைகள், காவல்

நிர்வாகம் மற்றும் அறிவியல், நவீன இந்தியா மற்றும் காவல்துறையின் பங்கு போன்ற உள்ளரங்க வகுப்புகளும் நடைபெறும்.

மேலும், குற்றச் சம்பவ இடத்தில் தடய அறிவியலை பயன்படுத்தி குற்றவாளிகளை கண்டுபிடிப்பது, கணினி குற்றம் சார்ந்த நவீன தடுப்பு முறைகள், பொருளாதார குற்றங்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பெண்கள் மற்றும் சிறார்களின் மீதான பாலியல் வன்முறை குற்றங்களை கையாளும் முறைகள், குற்றச் சம்பவ இடத்தை அறிவியல் முறையில் நுண்ணறியும் தன்மை, சட்டம் - ஒழுங்கு, மதக்கலவரம் சம்மந்தமாக முன்தகவல் சேகரிக்கும் செயல்களிலும், கவாத்து, நீச்சல், கராத்தே, யோகா, நவீன ஆயுதங்களை கையாளுதல், குதிரையேற்றம், வாகனங்கள் ஓட்டுதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும். பல வகையான நவீன துப்பாக்கிகளை பயன்படுத்தி குறிபார்த்து சுடுதல், இரவு நேரங்களில் திடீர் தாக்குதலை சமாளித்தல், வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்க செய்தல், இயற்கை பேரிடர் நிகழ்வுகளை சமாளித்தல், தீவிரவாதம் மற்றும் சமூக விரோதிகளை கையாளும் திறன் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படும். இந்த ஓர் ஆண்டு அடிப்படை பயிற்சி 31.8.2022 -இல் நிறைவு பெறும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் உதவி ஆய்வாளர்களுக்கான ஓர் ஆண்டு பயிற்சியினை தொடங்கி வைத்து பேசியதாவது:**

சட்டம் ஒழுங்கு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!

பயிற்சி காவல் துறை இயக்குநர் அவர்களே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

பயிற்சி உதவி ஆய்வாளர்களே!

வணக்கம்!

தமிழ்நாடு அரசின் ஒரு கை நிர்வாகம் என்றால் இன்னொரு கை காவல்துறை.

இந்த இரண்டும் முறையாக - சரியாகச் செயல்பட்டால் அந்த அரசாங்கம் தலைசிறந்த அரசாங்கமாக பேர் பெரும். அந்த வகையில் காவல்துறையின் செயல்பாடு மிக மிக முக்கியமானது.

அந்த காவல் துறையில் உதவி ஆய்வாளர்களாக அடியெடுத்து வைக்கும் நிலையில் உங்களது பயிற்சியைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமையடைகிறேன்!

காவல்துறையில் எத்தனையோ உயர் பதவிகள் இருந்தாலும், மக்களோடு நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக உதவி ஆய்வாளர்களாகிய நீங்கள்தான் இருக்கப் போகிறீர்கள்.

அந்த வகையில் மிக மிக முக்கியமான கடமையும் பொறுப்பும் உதவி ஆய்வாளர்களான உங்களுக்குத் தான் இருக்கிறது!

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு துறை வாரியாக உயர் அதிகாரிகளோடு தனித்தனியாக கலந்துரையாடல் நடத்தினேன்.

அப்போது உயர் காவல் துறை அதிகாரிகளைச் சந்தித்து நான் பேசினேன்.

அப்போது ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னேன்.

‘‘காவல் துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரும் துறையாக மாற வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

குற்றங்கள் குறைய வேண்டும் என்பதை விட -

குற்றமே நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக அது மாற வேண்டும்" என்பதைக் குறிப்பிட்டேன்.

என்னுடைய இந்த ஆசை என்பது உங்கள் ஆசையாகவும் மாற வேண்டும்.

நமது விருப்பம் செயலாகத் தொடங்கினால் தமிழ்நாடு செழிப்படையும்.

எந்த அரசாக இருந்தாலும் அதில் இருந்து மக்கள் எதிர்பார்ப்பது முதலில் அமைதிதான். நிம்மதியான வாழ்க்கை. பயமற்றதாக தனது வாழ்க்கை அமைய வேண்டும் என்று சாதாரண மனிதர்கள் நினைக்கிறார்கள். அந்த அமைதியை உருவாக்கித் தரும் மாபெரும் கடமை காவல்துறைக்குத்தான் இருக்கிறது.

அதனை முதலில் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த இடத்துக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால் மிகச் சாதாரணமாக இங்கு நீங்கள் வந்துவிடவில்லை.

எத்தகைய தடைகளைத் தாண்டி நீங்கள் வந்துள்ளீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன்.

உடல் உறுதி -

மன பலம் -

அறிவுத் திறன் -

விடாமுயற்சி -

வெற்றியை அடைய வேண்டும் என்ற இலட்சிய எண்ணம் - ஆகியவைதான் இந்த இடத்துக்கு உங்களை அழைத்து வந்துள்ளன.

இந்தக் குணங்களை நீங்கள் எந்தச் சூழலிலும் கைவிட்டு விடக்கூடாது.

போட்டித் தேர்வில் வெற்றி பெறுவதற்கு எந்தளவு கடுமையாக உழைத்தீர்களோ - அதே அளவுக்கு கடுமையாக இந்தப் பயிற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

உடல் வளம் - மனத் திறம் - அறிவு வளம் ஆகிய மூன்றும் உள்ளவர்களாக நீங்கள் மாற வேண்டும்.

உடற்பயிற்சியுடன் சேர்ந்து நவீன தொழில்நுட்ப அறிவு படைத்தவர்களாக நீங்கள் வளர வேண்டும்.

தொழில்நுட்ப அறிவானது அனைவருக்கும் வேண்டும்; குறிப்பாக காவல்துறையினருக்கு மிகமிக அவசியம் வேண்டும்.

பயிற்சி உதவி ஆய்வாளர்கள் 941 பேரில் -

280 பேர் பெண்கள் என்பது பெருமைக்குரியதாக இருக்கிறது.

“நிமிர்ந்த நன்னடை - நேர்கொண்ட பார்வை - நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்” கொண்டவர்களாக பெண்ணினம் வாழ வேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

ஆணும் பெண்ணும் சமமானவர்களாக மட்டுமல்ல, ஆணை விட பெண்கள் உயர்வானவர்களாகச் செயல்பட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய பெண்ணினத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவம், காவல், துப்பறிதல், வாகனம் ஓட்டுதல் போன்ற துறைகளில் முன்னணிக்கு வருவதைப் பார்க்கும்போது பெரியார் நினைத்த சமுதாயம் மலர்ந்ததற்கு எடுத்துக்காட்டாக இந்தக் காட்சி அமைந்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக காவல்துறையில் மகளிரைப் பங்கெடுக்க வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

காவல்துறையில் உங்களைப் போன்ற பெண் வீராங்கனைகள் அதிகமாக பங்கெடுக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் இங்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல்வேறு பட்டங்களைப் பெற்று -

உரிய பயிற்சியும் பெற்று - காவல்துறையில் நீங்கள் செயல்படத் தொடங்கும் போது அமைதியான தமிழ்நாட்டை உருவாக்க நீங்கள் அனைவரும் சூளுரைக்க வேண்டும்.

'காவல்துறை உங்கள் நண்பன்' - என்ற சொல்லுக்கு எடுத்துக் காட்டாக நீங்கள் செயல்பட வேண்டும்.

அநியாத்தை தடுக்க எப்போதும் தயங்காதீர்கள்.

நியாயத்துக்காக எப்போதும் நில்லுங்கள்.

உங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதியை குற்றம் நடக்காத பகுதியாக மாற்றுங்கள்.

உண்மைக் குற்றவாளிகள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துங்கள்.

சூழ்நிலை காரணமாக குற்றம் செய்தவர்களை திருத்த முயற்சி செய்யுங்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டுங்கள்.

இவை அனைத்தையும் சட்டபூர்வமாகச் செய்யுங்கள்.

'காவலர்கள் மக்களின் சேவகர்கள், அவர்கள் உண்மையில் சமூக சீர்திருத்தவாதிகள்' என்று சொன்னார் மகாத்மா காந்தி. அத்தகைய சேவகர்களாகவும் சமூகச் சீர்திருத்தவாதிகளாகவும் நீங்கள் செயல்பட வேண்டும்.

''சட்டத்தை மதிப்போருக்கு இன்முகம் காட்டியும், மீறுவோரை இரும்புக் கரம் கொண்டு அடக்கியும் செயல்பட வேண்டும்'' என்றார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இதுதான் உங்களது இலக்காக அமைய வேண்டும்.

இந்த ஓராண்டுப் பயிற்சியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

மக்களுக்கு உங்களது சேவை மூலம் பயனுள்ளதாக ஆக்குங்கள்.

ஆற்றலும் அறிவும் கொண்டவர்களாக இவர்களுக்கு பயிற்சி தரும் காவல்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

இந்நிகழ்ச்சியில், காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, இ.கா.ப., தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தின் இயக்குநர் / காவல் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் அ.அமல்ராஜ், இ.கா.ப., தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தின் கூடுதல் இயக்குநர் / காவல் துறை தலைவர் திரு. நீ.பாஸ்கரன், இ.கா.ப., மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9